# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

**TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY**

(Established under Tamil Nadu Act 33 of 2008)

Karapakkam, Chennai - 600 097

Phone: 044 – 28389040 Website: www.tnteu.ac.in

**Lr.No.TNTEU/COE/2020/** **Date: 19.09.2020**

**Dr.M.Govindan, Ph.D.,**
Controller of Examinations i/c

## மாணாக்கருக்கான இணையவழித் தேர்வு வழிகாட்டு நெறிமுறைகள்
## (STUDENTS GUIDELINES FOR ONLINE EXAMINATIONS)

இணையவழியில் தேர்வு எழுதவுள்ள மாணவர்கள் அனைவரையும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் சார்பாக வாழ்த்துகிறோம்.

நமது பல்கலைக்கழகத்தின் B.Ed. / B.Ed.(Spl. Edn.) / M.Ed. / M.Ed.(Spl.Edn.) / B.Sc.B.Ed. (Non-Semester-IV Year)/M.Phil ஆகிய தேர்வுகள் இணையவழியில் 23.09.2020 முதல் 29.09.2020 வரை நடைபெறும் என்பதை மாணவர்களாகிய நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

1. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் இணையதளத்தில் உள்ள தேர்வு அட்டவணைப்படி, தேர்விற்கு மாணவர்கள் தயாராக வேண்டும்.
2. மாணாக்கர், ஒவ்வொரு தேர்வினையும் 40 பக்கங்களுக்கு மிகாமல் எழுத வேண்டும்.
3. மாணாக்கர், விடைத்தாளின் முகப்பு பகுதியை பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து அனைத்து தேர்வுகளுக்கும் தேவையான முகப்பு பிரதிகளை முன்கூட்டியே பதிவிறக்கம் செய்து, அதனை முழுமையாக பூர்த்தி செய்து, ஒவ்வொரு தேர்வு விடைத்தாளின் முகப்பு பகுதியாக இணைக்க வேண்டும்.
4. அரசு உத்தரவின்படி, மாணாக்கர் தேர்வு எழுதுவதற்காக கல்லூரிக்கு நேரடியாக செல்லக்கூடாது.
5. ஒவ்வொரு தேர்வன்றும், கல்லூரி முதல்வர் மின்னஞ்சல் /புலனச்செயலி (Mail/Whatsapp) மூலமாக தேர்வு தொடங்கும் நேரத்திற்கு, 30 நிமிடங்களுக்கு முன்பு வினாத்தாளை உங்களுக்கு அனுப்புவார்.
6. நீங்கள், கல்லூரி முதல்வரிடமிருந்து வினாத்தாள் கிடைக்கப்பெற்றதும், தேர்வின் விதி மற்றும் புனிதத்தன்மையை கடைப்பிடித்து தேர்வினை எழுத வேண்டும்.
7. நீங்கள், ஒவ்வொரு தேர்விற்குரிய காலத்திற்குள் தேர்வினை எழுதி முடிக்கவேண்டும். அத்துடன் தேர்வு முடிந்த நேரத்திலிருந்து, அடுத்த ஒரு மணி நேரத்திற்குள் அத்தேர்விற்குரிய விடைத்தாள்களை Scan செய்து File Name-ஆக உங்கள் Register Number_Subject Code (Eg:1010118BD001_SBCA) என்று Save செய்து கல்லூரி முதல்வருக்கு உடனடியாக மின்னஞ்சல் (E-mail)/ புலனச்செயலி (Whatsapp) மூலமாக Pdf Format-ல் அனுப்பவேண்டும். பின்னர் Name, Register No., Answer sheets Sent என்ற தகவலை Whatsapp மூலம் கல்லூரி முதல்வருக்கு தெரிவிக்க வேண்டும்.
8. நீங்கள், உங்களுடைய அனைத்து விடைத்தாள்களையும் தேர்வின் இறுதி நாள் அல்லது மறுநாளுக்குள் கல்லூரி முதல்வருக்கு தரமான உறையில் வைத்து, விரைவுத் தபால் /பதிவுத் தபால் (Speed Post/ Registered Post) மூலம் அனுப்பவேண்டும்.

M. Govindan

**CONTROLLER OF EXAMINATIONS i/c**